
# குரு தத்துவம்

ப்ரக்ஞன்




PRAJNAN
ADVAITA ACHARYA

## பராபரம் பாடசாலை

PARAPARAM PATASALAI

அறிவு • அனுபவம் • ஆன்ம சாந்தி

# குரு தத்துவம்

ப்ரக்ஞன்

# குரு தத்துவம்

உபநிஷத்துக்கள் இயற்கை தன்னுடைய இயல்பின்படியே செயல்படுகிறது என்று கூறுகின்றன. அதாவது, இயற்கை தன்னுடைய கடமைகளை மிகவும் சரியாகவும், ஒழுங்கு மாறாத நியதியில் இயல்பாகவே செய்து கொண்டிருக்கிறது. அது தானாகவே நிகழ்கிறது. அதை யாராலும் உயர்த்தவோ, அழிக்கவோ, மேம்படுத்தவோ முடியாது.

இதுவே இயற்கையின் இயல்பு.

அதுப்போல, என்றுமே வளர்ச்சியும், தேய்வும் இல்லாத அழிவற்ற ஆத்ம தத்துவமே நம்முடைய உண்மையான இயல்பு. அது அழிவற்றது. அதற்கு வளர்ச்சியும் இல்லை, குறைவும் இல்லை. அது என்றென்றும் மாறாமல், எப்போதும் இருக்கின்ற இருப்பு.

அந்த வகையிலே, அந்த ஆத்மாவின் பிரகாசத்தால், இயற்கையில் பல்வேறு குணங்கள் வெளிப்படுகின்றன. அவைகளை சத்துவம், ரஜஸ், தமஸ் என்னும் மூன்று குணங்கள் என்பதாகப் பார்க்கிறோம்.

இந்த மூன்று குணங்களும் இயற்கையில் வெளிப்படுவதற்கு சில கருவிகளும், வடிவங்களும் தேவைப்படுகின்றன. அவைகள்தான் **பிரம்மா, விஷ்ணு, மகேஸ்வரர்** என்று குறியீடாகக் கூறப்படுகின்றன.

இவர்கள் தனித்தனியாக இருக்கும் மனித வடிவிலான தெய்வங்கள் என்பதாக எடுத்துக் கொள்ளாமல், தெய்வீகத் தத்துவத்தின் குணவடிவங்கள் என்று புரிந்துக் கொள்ள வேண்டும்.

ஆக, ஒன்றேயாகிய பிரம்ம தத்துவத்தின் சக்தியை, விஷ்ணு தத்துவம், ஈஸ்வர தத்துவம் போன்ற குணங்களின் தெய்வீக வெளிப்பாடுகளாகப் புரிந்துக் கொள்ளப்பட வேண்டும்.

**ஈஸ்வரத் தத்துவம் என்றால் என்ன?**

பகவத் கீதை கூறுகிறது: –

"ஈஸ்வர: ஸர்வபூதானாம்

ஹ்ருத்தேஸேSர்ஜுன திஷ்டதி"

அதாவது, எல்லா உயிர்களின் இதயத்திலும் ஈஸ்வரன் நிலைத்திருக்கிறான் என்று பகவத்கீதை கூறுவது எதன் அடிப்படையில் என்றால், படைக்கப்பட்ட உயிரினங்களின் இதயத்தில் ஒளிர்கின்ற தெய்வீக சக்தி என்பது, படைப்புகளின் பரிணாமத்தின் மூலம், ஜீவர்களின் ஒரு அறிவு முதல் ஆறு அறிவு வரை, புத்தி சக்தியாக பிரகாசிக்கச் செய்கின்ற சக்தியே **"ஈஸ்வரத் தத்துவம்"** ஆகும்.

அதனால், ஒவ்வொருவருடைய இதயத்திலும் ஈஸ்வரத் தத்துவம் இருக்கிறது.

அனைத்து சுருதிகளும் இந்த இதயத்தில் நிலைபெற்றுள்ள ஒரே உண்மையை **"ஆத்மா"** என்று அழைக்கின்றன.

இந்த தூய அறிவின் பிரகாசமான இதயத்திலிருந்தே மனம் தோன்றுகிறது. எண்ணங்களின் வடிவமாக வெளிப்படுவது மனம் மட்டுமே ஆகும்.

இந்த மனமே விஷ்ணுத் தத்துவம்.

**'விஷ்ணு'** என்றால், சர்வ வியாபி என்பதாக, எங்கும் வியாபித்திருப்பவன் என்று பொருள்.

அதாவது, எல்லாமாக, எங்கும் பரவியிருப்பதே விஷ்ணு.

மனம் எண்ணங்களின் வழியாக உலகம் முழுவதும் வியாபிப்பதைப் போலத் தோன்றுகிறது. ஆகவே, இந்த வியாபகத் தன்மையின் அடிப்படையில் மனம் விஷ்ணுத் தத்துவம் என்று கூறப்படுகிறது.

இந்த மனத்திலிருந்துதான் வார்த்தை தோன்றுகிறது.

வார்த்தை அல்லது வாக்கு என்பதுதான் – பிரம்மா.

எனவே,

இதயம் (புத்தி) – **ஈஸ்வரத் தத்துவம்**.

மனம் (எண்ணங்கள்) – **விஷ்ணுத் தத்துவம்**.

வாக்கு (வெளிப்படுதல்) – **பிரம்மத் தத்துவம்.**

இந்த மூன்றின் ஒருமைப்பாடே ஆத்மத் தத்துவத்தின் தெய்வீக வெளிப்பாடு.

அதனால்தான்,

குருர் ப்ரஹ்மா குருர் விஷ்ணு:
குருர் தேவோ மஹேஸ்வர: |
குருஸ் சாக்ஷாத் பரம்ப்ரம்ம
தஸ்மை ஸ்ரீ குரவே நமஹ ||

என்று கூறப்படுகிறது.

**இதன் ஆழமான பொருள் என்ன?**

குரு பிரம்மா என்றால் – குரு என்பது படைப்புக் கடவுளான பிரம்மா என்று மட்டும் பொருள் கொள்ள வேண்டியதில்லை. நம்முடைய வாக்கு பிரம்மத் தத்துவத்தின் வெளிப்பாடு.

குருர் விஷ்ணு என்றால் – எங்கும் வியாபித்திருக்கும் மனம், விஷ்ணுத் தத்துவத்தின் வெளிப்பாடு.

குருர் தேவோ மகேஸ்வர: என்றால் – நம்முடைய இதயத்தில் நிலைத்திருக்கும் ஈஸ்வரத் தத்துவம்.

இந்த மூன்றும் ஒன்றாக உணரப்படும் இடமே ஆத்ம தத்துவம்.

அதனால்தான்,

"குரு: ஸாக்ஷாத் பரப்ரஹ்ம

தஸ்மை ஸ்ரீ குரவே நம:" என்று கூறுகிறோம்.

குரு என்பவர் வெளியில் மட்டுமே தேடப்பட வேண்டிய ஒருவர் அல்ல. குருத்துவம் என்பது நமக்குள்ளேயே இருக்கும் அறியாமை இருளை அகற்றும் தத்துவம் ஆகும்.

'குரு' என்ற சொல்லின் ஆழமான பொருளே – இருளை அகற்றுபவர்.

நம்மிடம் சத்துவம், ரஜஸ், தமஸ் என்ற மூன்று குணங்களும் இருக்கும் வரை அறியாமை முழுமையாக நீங்காது. இந்த மூன்று குணங்களையும் கடந்த நிலையை அடைவதே உண்மையான ஞானத்தின் நோக்கம்.

மூன்று குணங்களின் ஒருமைப்பாட்டையும், அவற்றின் பின்னால் இருக்கும் ஒன்றான ஆத்ம தத்துவத்தையும் உணர்வதே உண்மையான குருபோதம்.

**அந்த ஒருமை என்ன?**

"மமாத்மா ஸர்வபூதாத்மா" – என்னுடைய ஆத்மாவே அனைத்து உயிர்களின் ஆத்மாவாக இருக்கிறது.

"ஏகோऽஸ்யம் ஸர்வபூதாந்தராத்மா" – ஒரே ஆத்மாவே அனைத்து உயிர்களுக்குள்ளும் அந்தராத்மாவாக இருக்கிறது.

இந்த ஒருமையை மறந்துவிட்டு வேறுபாடுகளை வளர்த்துக் கொண்டதால்தான் மனதின் அமைதியற்ற நிலைக்கு மனிதன் ஆளாகிறான்.

இந்த உலகம் படைக்கப்படவும், காக்கப்படவும், அழிக்கப்படவும் காரணமாக இருப்பவை இந்த மூன்று குணங்களே.

**சத்துவம்** – நிலைநிறுத்துதல்,

**ரஜஸ்** – இயக்கம்,

**தமஸ்** – ஒடுக்கம்/அழிவு

என்ற வகையில் இயற்கையின் செயல்பாடுகள் வெளிப்படுகின்றன.

எனவே, நம்முடைய உடலே ஒரு ஆலயம்.

**"தேஹோ தேவாலய: ப்ரோக்தோ**

**ஜீவோ தேவ: ஸனாதன:"**

உடல் ஆலயம் என்று கூறப்படுகிறது. அதில் வாழ்கின்ற ஜீவனே சனாதனமான தெய்வீகத் தத்துவம். இந்த உடல் என்ற ஆலயத்தின் இதயத்தில் அந்த தெய்வீகத் தத்துவம் நிலைத்திருக்கிறது. அதனுள் **பிரம்மா, விஷ்ணு, மகேஸ்வரர்** என்ற மூன்று தத்துவங்களும் இருக்கின்றன.

'உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்

வள்ளற் பிரானுக்கு வாய் கோபுரவாயில்

தெள்ளத் தெளிந்தார்க்குச் **சீவன் சிவலிங்கம்**

கள்ளப் புலனைந்தும் காளாமணி விளக்கே' – *திருமந்திரம்.*

பிரம்மா ஒரு குறிப்பிட்ட இடத்தில் மட்டும் இருக்கிறார், விஷ்ணு வைகுண்டத்தில் இருக்கிறார், மகேஸ்வரர் கைலாசத்தில் இருக்கிறார் என்று நினைப்பது அறியாமையின் வெளிப்பாடாகும்.

அவர்கள் குறிப்பிட்ட இடங்களில் மட்டும் இருப்பவர்கள் என்றால், அவர்களுக்கும் மனிதர்களுக்கும் என்ன வேறுபாடு?

"என்னுடைய இடம் கைலாசம்; உன்னுடைய இடம் வைகுண்டம்" என்று அவர்களுக்குள்ளேயே பிரிவை உருவாக்க முடியுமா?

உண்மையில், பிரம்மா, விஷ்ணு, மகேஸ்வரர் என்பவைகள் ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் இயங்குகின்ற தெய்வீகத் தத்துவங்களின் குறியீடுகள். நம்முடைய உடல் ஒரு ஆலயம். ஆனால், அது ஒரே இடத்தில் கட்டப்பட்ட ஆலயம் அல்ல. இது ஒரு நடமாடும் ஆலயம்.

நாம் எங்கு சென்றாலும் இந்த ஆலயம் நம்முடன் இருக்கின்றது. எனவே, இறைவன் எப்போதும் நம்முடன் இருக்கிறான், நம்முடைய செயல்களிலும் இருக்கிறான், நம்முடைய இதயத்திலும் இருக்கிறான் என்ற உண்மையை உணர்ந்து ஒவ்வொரு மனிதனும் வாழ முற்பட வேண்டும்.

நாமே தெய்வீகத் தன்மை பொருந்தியவர்கள். தெய்வீக அம்சத்தின் வெளிப்பாடுகள். அது உள்ளத்தின் உயரிய நிலைப்பட்டைப் பொருத்து ஒவ்வொருவருக்கும் அமைகிறது.

"வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்

உள்ளத் தனையது உயர்வு." – *திருக்குறள்.*

நீர் மட்டம் உயர, உயர தாமரை மலரின் தண்டு உயர்ந்து மேலே வருவதுப்போல, மனித மனமும் உயர்ந்தால் மட்டுமே, அவனது வாழ்க்கை உயரும். இந்த மனம் என்பது, அந்த தூய அறிவின் பிரதிபிம்ப வெளிப்பாடு என்பதினால், அந்த தூய அறிவு (ஆத்மா) பிரகாசிக்கின்ற நிலைக்கு மனதை தூய்மையாக வைத்துக் கொள்வது மிக, மிக முக்கியம்.

மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்

ஆகுல நீர பிற. – *திருக்குறள்.*

ஒருவன் தன் மனத்தில் தீய எண்ணங்கள் இல்லாமல், எப்போதும் தூய்மையானவனாக இருக்க வேண்டும். அறம் என்பது இவ்வளவே என்கின்றது திருக்குறள். இத்தகைய நம்முள் இருக்கும் அந்த தெய்வீகப் பூரணத்துவத்தை உணரும்போது மட்டும்தான் உண்மையான மன நிறைவை அடைகிறோம்.

அந்த உண்மையை உணர்ந்து, நாம் ஒவ்வொரு செயலிலும், அந்த ஒருமையை வெளிப்படுத்த வேண்டும்.

நாம் பலவிதமான ஆன்மீகப் பயிற்சிகளைச் செய்து கொண்டிருக்கிறோம். இனிமேல், அத்தகைய பயிற்சிகளை செய்வது மட்டும் போதாது. அந்த பயிற்சிகள் வாயிலாக உடல் ஆரோக்கியம் உண்டாவதுப் போல, உள்ளம் மலருகின்ற உயரிய உபதேசங்களையும் மனம் உள்வாங்கும் நிலையில் மட்டுமே, மனிதன் தெய்வீகத் தன்மையை தன்னுள் உணர முடியும்.

நாம் உயர்ந்தவைகளை நினைக்க வேண்டும். உயர்ந்தவைகளை மட்டுமே பேச வேண்டும். உயர்ந்தவைகளை மட்டுமே செயல்படுத்த வேண்டும்.

எண்ணம் – சொல் – செயல் என இந்த மூன்றிலும் ஒருமை இருக்க வேண்டும். உள்ளே ஒன்றை நினைத்துக் கொண்டு, வெளியே வேறு மாதிரி பேசிக் கொண்டு, முரண்பட்ட வாழ்க்கை வாழ்வதினால், ஒருபோதும், அந்த ஒருமையை உணர முடியாது.

மனம் ஒருவிதம், வாக்கு வேறு ஒருவிதம், செயல் வேறு விதம் என ஒவ்வொரு விசயத்திலும் மனிதனுக்குள் உண்டாகும் முரண்பாடு காரணமாக, அவன் தன் தெய்வீகத் தன்மையை உணராமல் இருக்கிறான்.

நாம் பல அறிவுரைகள் தருகிறோம். பல சேவைகள் செய்கிறோம். பக்தி, பூசைகள் மற்றும் பஜனைகள் செய்கிறோம். இதுப்போன்ற பலவிதமான ஆன்மீகச் செயல்களில் அன்றாடம் ஈடுபடுகிறோம். ஆனால், இவைகள் அனைத்தையும் செய்தும் நம்முடைய எண்ணம், சொல், செயல் ஆகிய மூன்றிலும் ஒருமை இல்லையென்றால் என்ன பயன்?

சத்துவம், ரஜஸ், தமஸ் ஆகிய மூன்று குணங்களின் இயல்பை உணர்ந்து, அவற்றின் பின்னால் இருக்கும் ஒருமையை அனுபவிக்க வேண்டும்.

அப்போது மட்டும்தான் உண்மையான ஆனந்தம் கிடைக்கும்.

அப்போதுதான் ஆத்ம தரிசனம் கிடைக்கும்.

ஆத்மாவைத் தேடி நாம் எங்கும் செல்ல வேண்டியதில்லை. ஆத்மா ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு செல்வதில்லை. அது வருவதும் இல்லை. போவதும் இல்லை. ஆகவே, "எங்கிருந்தோ கடவுள் வந்து நமக்கு தரிசனம் தருவார்" என்று நினைக்க வேண்டியதில்லை.

உண்மையில், தெய்வீகம் என்பது வருவதும், போவதும் இல்லாத சக்தி. அதை சரியான முறையில் உணர்ந்து வாழும்போது மட்டுமே, அந்த தெய்வீக வாழ்க்கை நமக்கு வாய்க்கின்றது. அதுவே தேவர்கள் வாழ்க்கை, சொர்க்க வாழ்க்கை, ஆனந்த வாழ்க்கை ஆகும்.

இதற்குத் தேவையானது ஒருமை. ஒருமையில்தான் நமது ஆனந்தம் அடங்கியுள்ளது. ஒருமையே அன்பின் வடிவம். அந்த அன்பே சிவம். அந்த சிவமே குரு.

குரு ஒருவரே.

**அந்த குரு யார்?**

அது நீயே!

குருத்துவத்தின் அந்த தெய்வீக சக்தி உனக்குள்ளேயே இருக்கிறது. ஆம், அது உன்னுடைய தூய அறிவாகவே எப்போதும் இருக்கின்றது. ஆனால், அதை வெளியே தேடி இங்கும், அங்கும் அலைந்துக் கொண்டிருக்கின்றவர்கள் தான் அதிகம் உள்ளனர்.

குருவே சிவமென்னக் கூறின னந்தி

குருவே சிவமென்பது குறித் தோரார்

குருவே சிவமாகக் கோனுமாய் நிற்குங்

குருவே யுரையுணர் வற்றதோர் கோவே. – *திருமந்திரம்.*

குருவாக இருப்பது சிவப் பரம்பொருளே என்பதை, தமக்குள் சிந்தித்து, ஆராய்ந்து அறிந்துக் கொள்ளாமல், பலரும் இருக்கின்றார்கள். அவ்வாறு, அதை ஆராய்ந்து அறிந்துக் கொண்டால், குருவே நம்முள் தூய அறிவாக இருந்துக் கொண்டு, அன்பையும், அருளையும் கொடுக்கும் சிவமாக இருந்து, நல்லவைகளை காட்டிக் கொடுத்தும், அல்லவைகளை அழித்தும், அருள் வழியில் வாழ வைத்தும், அறம் தவறாத ஒழுக்க நெறியில் நின்று, நன்மைகள் செய்தால் காப்பவனாகவும், தவறுகள் செய்தால் தண்டிக்கும் தலைவனாகவும் நிற்கின்றதை அறிந்து கொள்ளலாம்.

அவ்வாறு அறிந்துக் கொண்டவர்களுக்கு குரு என்பவர் வார்த்தைகளால் விவரிக்க முடியாதவராகவும், ஐம்புலன் உணர்வினால் உணர முடியாதவராகவும், இருக்கின்ற ஒரு ஆத்ம தத்துவம் என்பது விளங்கும்.

எனவே, பிரம்மா, விஷ்ணு, மகேஸ்வரர் என்பவை உனக்குள்ளேயே இருக்கும் மூன்று தத்துவங்கள். அந்த மூன்று குணங்களின் அடிப்படையில்தான் உன் வாழ்க்கை உருவாக்கப்பட்டுள்ளது. அதாவது, உன்னிடம் வெளிப்படும் இந்த மூன்று குணங்களே உன்னை உருவாக்குகின்றன, காக்கின்றன, வளர்க்கின்றன அல்லது வீழ்த்துகின்றன.

உன் மனம் சரியான வழியில் இயங்கும்போது, அது உன்னைப் பாதுகாக்கிறது. உன் நடத்தை சரியான பாதையில் இருக்கும்போது, அதுவே தெய்வீகமாகிறது.

பாவம் என்று தனியாக எங்கோ இல்லை. நாம் செய்யும் செயல்களிலேயே அதன் விளைவு என்பதாக இருக்கிறது. அதுப்போல, புண்ணியம் என்பதும் எங்கோ வெளியில் இல்லை.

உன்னுள்ளேயே ஆத்ம ஸ்வரூபமாக, தூய அறிவாக, சுயம் பிரகாச ஒளியாக எப்போதும், பிரகாசித்துக் கொண்டிருக்கின்றது. நாம் செய்யும் செயல்களின் தரத்திலும், நம்முடைய எண்ணங்களிலும், நம்முடைய நடத்தையிலும் உண்மையான தெய்வீகம் வெளிப்படுகிறது.

நம்முடைய நல்லதற்கும், கெட்டதற்கும் நம்முடைய செயல்களே காரணம். நமது வீழ்ச்சிக்கும், வளர்ச்சிக்கும் நம்முடைய குணங்களே காரணம். எனவே, நம்முடைய குணங்களை எவ்வாறு சரியான பாதையில் செலுத்துவது? என்பதே நாம் நம்மிடம் கேட்க வேண்டிய மிகவும் அவசியமான கேள்வி. நம்முடைய நடத்தை சரியாக இருந்தால், துன்பங்களைத் தாண்டி ஆனந்தத்தை நோக்கிச் செல்ல முடியும்.

எல்லோரும் எல்லா வளங்களும், நலங்களும் பெற்று, நீடூழி வாழ வாழ்த்துக்கள்.

வாழ்க பல்லாண்டு!

வாழ்க மனநிறைவுடன்

ஓம் தத் ஸத்!

என்றும் அன்புடன்,

**ப்ரக்ஞன்.**

# குரு தத்துவம்

ப்ரக்ஞன்




## பராபரம் பாடசாலை

PARAPARAM PATASALAI

அறிவு • அனுபவம் • ஆன்ம சாந்தி